செ.வெ.எண்.65 நாள்.28.03.2017

# பத்திரிக்கை செய்தி

அரசாணை எண். 181, உள் ( சிறை - 2 ) துறை, நாள் 10.03.2017 ல் பாளையங்கோட்டை மத்திய சிறையின் கட்டுப்பாட்டிலுள்ள கீழ்க்கண்ட சிறைகளுக்கு தலா ஒரு சமையலர் பணியிடம் சிறப்பு ஊதிய விகிதம் ரூ. 4800 - 10000 + தர ஊதியம் ரூ. 1400 /- என்ற ஊதிய அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

1) பெண்கள் தனிக்கிளைச்சிறை கொக்கிரகுளம் - 1 பணியிடம் ( பெண் )

2) பார்ஸ்டல் பள்ளி, நாங்குநேரி - 1 பணியிடம் ( ஆண் )

3) கிளைச்சிறை, தென்காசி - 1 பணியிடம் ( ஆண் )

எனவே, மாவட்ட அளவிலான தேர்வு குழு மூலம் காலிபணியிடங்களுக்கு தகுதியான நபர்கள் நேர்காணல் நடத்தி தேர்வு செய்யப்பட உள்ளனர். இந்த பணிக்கு 18 வயது முதல் 30 வயதுக்குட்பட்ட, 8 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே விண்ணபிக்கலாம். சமையல் பணியில் இரண்டு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நேர்முக தேர்வில் கலந்து கொள்ள விருப்பமுள்ள தகுதி வாய்ந்த நபர்கள் வரும் 10.04.2017 மாலை 05.45 மணிக்குள் " கண்காணிப்பாளர், மத்தியசிறை, பாளையங்கோட்டை " என்ற முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்பலாம். விண்ணப்ப படிவத்துடன் கல்வி சான்று, குடும்ப அட்டையின் நகல், வேலைவாய்ப்பு அடையாள அட்டையின் நகல், சாதிச்சான்றிதழ் நகல் , ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

திருநெல்வேலி
செய்தி மக்கள் தொடர்பு

Pr1/SJ Sec/SJ2

அலுவலகம்
திருநெல்வேலி